அனுமதி அட்டை கிடைத்தவுடனே விண்ணப்பதாரிகளுக்கு பகிர்ந்தளிக்கவும். அவற்றை பகிர்ந்தளிக்கத் தாமதிப்பதனால் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பான பொறுப்பு உங்களுடையதாகும்.

DP/OL/2026/07/01

எனது எண்: 6/4/OL/2026
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்ல.
2026.11.12

பாடசாலை அதிபர்களுக்கும்,

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதரண தர)ப் பரீட்சை – 2026

உங்கள் பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கு உரிய பரீட்சைச் சுட்டெண், பரீட்சை நடைபெறும் நிலையம் ஆகியனவற்றைக் காட்டும் (கணினியில் அச்சிடப்பட்ட) வரவு இடாப்பு பிரதியும், பரீட்சை அனுமதி அட்டைகளும் இத்துடன் அனுப்பப்பட்டுள்ளன.

1. உங்கள் பாடசாலைக்குரிய அனுமதி அட்டைகள் கிடைத்தவுடன் **உடனடியாக** அவர்களின் வகுப்பாசிரியர்கள் ஊடாக பரீட்சார்த்திகளுக்கு வழங்கி **பரீட்சார்த்திகளின் பெயர், தேசிய அடையாள அட்டை எண், தோற்றவுள்ள பாடங்கள், பாட இலக்கம், பாடங்களின் மொழிமூலம்** என்பன சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளனவா என்பதைப் பரீட்சித்துப் பார்த்து உறுதிப்படுத்தவும்.

   விசேடமாக பின்வரும் பாடங்கள் சரியாகவுள்ளனவா என உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
   - ★ சமய பாடங்கள்
   - ★ முதலாம் பாடத்தொகுதிக்குரிய பாடங்கள்
   - ★ இரண்டாம் பாடத்தொகுதிக்குரிய பாடங்கள்
   - ★ மூன்றாம் பாடத்தொகுதிக்குரிய பாடங்கள்

   } ஒரு பாடத்தொகுதியிலிருந்து ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதற்கு இடமளிக்கப்படும்.

2. அவ்வாறு பரீட்சித்துப் பார்த்து உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் **உடனடியாக** அனுமதி அட்டைகளை உரிய பரீட்சார்த்திகளுக்கு வழங்க வேண்டும். பின்னர் சம்பவத்திரட்டு புத்தகத்தில் குறிப்பிட வேண்டும்.

3. பாடசாலையை விட்டுச்சென்ற அல்லது வேறு காரணங்களால் பரீட்சை அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ள வருகை தராத பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறான பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு முன்னர் அனுமதி அட்டைகளைக் கோரினால் அவற்றை விநியோகிப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்க.

4. **அனுமதி அட்டைகளில் திருத்தம் செய்தல்**

   - **பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளில் பாடம் மாற்றம், மொழிமூலம் மாற்றம், பெயர் மாற்றம், அல்லது தேசிய அடையாள அட்டை எண் மாற்றம், ஆண்/பெண் வேறுபாடு, பிறந்த தினம் போன்றனவற்றில் திருத்தங்கள்** இருப்பின் **2026 நொவம்பர் மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் 2026 நொவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை** பரீட்சைத் திணைக்களத்தின் **http://onlineexams.gov.lk** என்ற இணையத்தளத்துக்குப் பிரவேசித்து நிகழ்நிலை முறைமையில் இம்மாற்றங்களை செய்து கொள்ளல் வேண்டும்.

   - ஒரு பரீட்சார்த்திக்கு ஒரு திருத்தத்தினை மேற்கொள்வதற்காக **ஒரு சந்தர்ப்பம்** மட்டுமே வழங்கப்படும்.
   - பெயர், தேசிய அடையாள அட்டை எண் ஆகிய இரண்டில் **ஒன்றை மட்டுமே** நிகழ்நிலை முறைமையில் திருத்தம் செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும்.

   - **பரீட்சார்த்தி ஒருவரின் தேசிய அடையாள அட்டை எண்ணில் மட்டும் திருத்தம் செய்யப்படுவதாயின் அதிபர் ஊடாக பரீட்சை அனுமதி அட்டையின் மறுபக்கத்தில் கையொப்பம் இடும் இடத்தில் சரியான தேசிய அடையாள அட்டை எண்ணை எழுதி, நிகழ்நிலை ஊடாக திருத்தி அதனை தரவிறக்கம் செய்த பிரதியை உறுதிப்படுத்தி அத்துடன் அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட அடையாள அட்டையின் நிழற்பிரதியையும் இணைத்து அனுமதி அட்டையுடன் பரீட்சார்த்திக்கு வழங்க வேண்டும்.**

- **பெயர் , தேசிய அடையாள அட்டை எண் ஆகியவற்றில் இரண்டிலும் திருத்தம் செய்ய வேண்டுமாயின் நிகழ்நிலையில் பெயரை மட்டும் திருத்தம் செய்து கொண்டு தேசிய அடையாள அட்டை எண்ணைத் திருத்துவதற்காக பரீட்சைத் திணைக்களத்திற்கு வருகைதரல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களை கொண்டு வரல் வேண்டும்.**

  - பரீட்சார்த்தியின் விவரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ள அதிபரால் உறுதிப்படுத்தி வழங்கப்பட்ட வேண்டுகோள் கடிதம்
    - ✶ பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 10 அல்லது 10 இற்கு மேற்பட்டவர்களாயின் பரீட்சார்த்தியின் விவரங்களை பொது படிவத்தில் உள்ளடக்கி அவர்களின் **சுட்டெண், அதற்குரிய சரியான தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக்** குறிப்பிட்டு Excel பிரதியுடன் (Softcopy) இறுவட்டில் (CD) பதிவுசெய்து பரீட்சைத் திணைக்களத்திற்கு வருகைதந்து சமர்ப்பித்தல் வேண்டும்.
  - பரீட்சார்த்தியின் அனுமதி அட்டையின் மூலப்பிரதி
  - நிகழ்நிலை முறைமையில் பெயர் திருத்தம் செய்யப்பட்டு தரவிறக்கம் செய்த பிரதி
  - பரீட்சார்த்தியின் தேசிய அடையாள அட்டை உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதி

- நிகழ்நிலையில் திருத்தங்களை மேற்கொண்ட பின்னர் மீண்டும் நிகழ்நிலையில் திருத்தங்களை மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்காதென்பதுடன், தேவையான மாற்றங்களை சரியாக தீர்மானித்துக் கொண்டதன் பின்னர் அம்மாற்றங்களை திருத்தம் செய்தல் வேண்டும்.

- நிகழ்நிலையில் சகல திருத்தங்களையும் மேற்கொண்டதற்கான உரிய மாற்றங்களுக்கான படிவத்தை தரவிறக்கம் செய்து அதிபரின் உறுதிப்படுத்தலுடன் அனுமதி அட்டையுடன் இணைத்து பரீட்சார்த்திகளுக்கு வழங்கவும்.

5. **விசேட காரணத்தின் அடிப்படையில் பரீட்சை நிலைய மாற்றங்கள் செய்யப்படுவதற்காக மாத்திரம் (விசேட காரணங்களை உறுதிப்படுத்தக் கூடிய எழுத்து மூல ஆவணங்களுடன்) பரீட்சைத் திணைக்களத்துக்கு வருகைதரல் வேண்டும்.**

6. பாடசாலைப் பரீட்சார்த்திகள் தொடர்பாக சமர்ப்பிக்கும் சகல திருத்தங்களும் அதிபரினால் மேற்கொள்ளப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் பரீட்சார்த்திகளோ அல்லது அவர்களுக்குப் பதிலாக வேறு எவராலுமோ, தனிப்பட்ட ரீதியில் செய்யப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது என்பதுடன், இது பற்றி பரீட்சார்த்திகளுக்குத் தெளிவுபடுத்தும்படி தயவுடன் வேண்டுகின்றேன்.

7. **2026.11.30 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்குப் பின்னர்** நிகழ்நிலை முறைமை சுயமாகவே செயலிழப்பதுடன் அதற்குப்பின் எவ்வித திருத்தங்களும் மேற்கொள்ள முடியாது என்பதுடன் உரிய காலப்பகுதியில் நிகழ்நிலையில் செய்ய முடியாததால் ஏற்படும் பாரதூரமான விளைவின் முழுப்பொறுப்பும் உங்களுக்கே உரியது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

8. பாடசாலை அதிபர் அல்லது பிரதி அதிபர் முன்னிலையில் பரீட்சார்த்திகள் கையொப்பமிட்ட பின்னரே பரீட்சார்த்திகளின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

9. கையொப்பம் உறுதிப்படுத்தாது அனுமதி அட்டையை பரீட்சார்த்திக்கு வழங்குவதைத் தவிர்க்கவும்.

10. பரீட்சார்த்தியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தப்படும் இடத்தில் இடும் கையொப்பத்தினையே பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பங்களில் அனுமதி அட்டையில் இடல் வேண்டும் என அறிவுறுத்தப்பட வேண்டும்.

11. ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் உரிய அனுமதி அட்டைகள் (கணினியில் அச்சிடப்பட்ட) வழங்கப்பட வேண்டும். அனுமதி அட்டையில் வேறாக்கத்தக்க பகுதியில் விண்ணப்பதாரியின் சுட்டெண், நேர அட்டவணை, பாடங்களின் பட்டியல் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளமையினால் முதலாம் நாள் பரீட்சை வருகைதருவதற்கு முன்னர் அப்பகுதிகளை வேறாக்கி வைத்துக்கொள்ளும்படி பரீட்சார்த்திகளுக்கு அறிவுறுத்தவும். (அதில் குறிப்பிட்ட தமக்குரிய பாடங்களுக்கான தினம்/நேரம்/ வேளை என்பவற்றுக்கேற்ப குறிப்பிட்ட பரீட்சை நிலையத்துக்கு வருகை தருவதற்காக)

12. பரீட்சார்த்திகளுக்குரிய பரீட்சை விதிகளும் அறிவுறுத்தல்களும் அடங்கிய பிரதிகளில் சில உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. பரீட்சைக்குத் தோற்றும் எல்லாப் பரீட்சார்த்திகளையும் ஒன்றுகூட்டி ஒவ்வொன்றையும் அவர்களுக்கு எடுத்து விளக்கவும். பரீட்சை மண்டபத்தில் நேர்மையீனச் செயல்களில் ஈடுபடும் பரீட்சார்த்திகளுக்கு 1968ஆம் ஆண்டு 25ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின்படி தண்டனைகள் விதிக்கப்படும் என்பதனால் பரீட்சை முறைகேடுகளில் ஈடுபடாதிருக்குமாறு அவர்களைக் கடுமையாக அறியத்தருவதுடன் பரீட்சார்த்திகள் நடந்துகொள்ள வேண்டிய விதம் தொடர்பாக கீழே தரப்பட்டுள்ள விடயங்களில் கவனம் செலுத்துமாறும் அறிவுறுத்தவும்.

- தினமும் பரீட்சை நேர அட்டவணை தொடர்பாக சரியான விளக்கம் பெற்றிருத்தல்.

- பரீட்சைக்குத் தோற்றும்போது அனுமதி அட்டையையும் அடையாள அட்டையையும் எடுத்துச் செல்லல்.

- குறித்த நேரத்திற்கு அரை மணித்தியாலயத்திற்கு முன்பாகப் பரீட்சை மண்டபத்திற்குச் செல்லல். **(தாமதமாக வரும் பரீட்சார்த்திகள் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள்)**

- வினாப்பத்திரங்களில் உள்ள அறிவுறுத்தல்களை வாசித்தலும் அவற்றுக்கு ஏற்ப செயற்படுதலும்.
- விடைத்தாளில் குறிப்பிட்ட இடங்களில் சுட்டெண்ணை எழுதுதல்.

- விடை எழுதும்போது நேரத்தை முகாமை செய்வதை கவனத்திற் கொள்ளல்.

- பரீட்சார்த்திகளுக்கு பிரச்சினை ஏற்படும் சந்தர்ப்பங்களில் மண்டப மேற்பார்வையாளருக்கு அறிவித்தல்.

- மண்டபத்திற்கு எடுத்துச் செல்லத்தக்க பொருட்களையும் எடுத்துச்செல்ல முடியாத பொருட்களையும் பற்றி அறிவுறுத்தல்.


- மோசடிச் செயல்களை தவிர்த்தல், உதவியளித்தல், உதவி பெறல் தடைசெய்யப்பட்டுள்ளமை.

- ஒழுங்கீனமாக செயற்படும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைச் சட்டத்திற்கமைய தண்டனை வழங்கப்படும் என்பதை அறிவித்தல்.

- விடை எழுதிய எந்த தாள்களையும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லல் சட்டவிரோதமானது என்பதை அறிவித்தல்.

- இலத்திரனியல் உபகரணங்களை எடுத்துவருதல் தடைசெய்யப்பட்டிருத்தல்.

- தமது ஆளடையாளம் நன்றாக தெரியும் விதத்தில் முகம் முழுமையாகவும் காதுகள் இரண்டும் தெளிவாகத் தெரியக்கூடிய வகையில் கீழே தரப்பட்டுள்ளவாறு பரீட்சை நேரம் முழுவதும் பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும்.



13. ஒன்றுக்கொன்று சமமான பெயர்களைக் கொண்ட பரீட்சார்த்திகள் உங்கள் பாடசாலையிலிருந்து பரீட்சைக்குத் தோற்றவிருப்பின் அனுமதி அட்டைகள் அவர்களுக்கு வழங்கப்படுவதற்கு முன்னர் **பரீட்சார்த்திகளின் முழுப்பெயர், தோற்றும் பாடங்கள்** என்பவற்றை வரவு இடாப்பின் பாடசாலைப் பிரதியுடன் பரீட்சித்துப் பார்த்து அனுமதி அட்டைகளை உரிய பரீட்சார்த்திகளுக்கு வழங்கவும்.

14. எல்லாப் பரீட்சார்த்திகளும் தாம் பரீட்சைக்குத் தோற்றும் சகல சந்தர்ப்பங்களிலும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும்.

ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக ஏற்றுக்கொள்ளப்படும் ஆவணங்கள்:

- ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை அல்லது தற்காலிக அடையாள அட்டையாக ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள புகைப்படத்துடனான தற்காலிக ஆவணம்
- செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
- செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்

15. பரீட்சைத் திணைக்களத்திலிருந்து அனுமதி எதுவும் பெறாது வரவு இடாப்பிலோ அல்லது அனுமதி அட்டையிலோ எதுவித திருத்தமும் செய்தல் கூடாது என்பதுடன், தேவைப்படும்போது வேண்டிய விபரங்களை அறிந்து கொள்வதற்காக வரவு இடாப்பைப் பத்திரமாக வைத்திருக்கவும்.

16. உங்கள் பாடசாலையில் பரீட்சை நிலையம் அமைக்கப்பட்டிருப்பின்,

- பரீட்சையை வெற்றிகரமாக நடாத்துவதற்கு மண்டப மேற்பார்வையாளருக்குத் தேவையான வசதிகளையும் உதவியையும் வழங்க வேண்டும். (தேவையான வசதிகளுள்ள மண்டபம், தளபாடங்கள்)

- பாதுகாப்பு அலுவலர்களுக்கு அல்லது காவலர்களுக்கு அறிவித்து பாடசாலை வளாகத்தினுள்ளே வெளியாட்கள் பிரவேசிப்பதைக் கட்டுப்படுத்த வேண்டும்.

- பாடசாலை வளாகத்தினுள்ளே பரீட்சார்த்திகளுக்கு இடையூறு எதுவும் ஏற்படாது பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

  (உ+ம் : கட்டடத்தை பழுது பார்க்கும் பணிகள், வாத்திய இசைக்குழுக்களுக்குப் பயிற்சியளித்தல், விழாப்பணிகள், கூட்டங்கள்)

  அத்தகைய முறைப்பாடுகள் அறிவிக்கப்பட்டால் 1968 இன் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குட்பட வேண்டியேற்படும் சகலருக்கும் என அறியத்தரவும்.

17. மேற்படி விடயம் தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் கீழே தரப்பட்டுள்ள இலக்கங்களூடாக தொடர்பு கொள்ள முடியும் என்பதுடன் பரீட்சை நடாத்துவதற்கு தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பை நான் மேலானதாகக் கருதுகின்றேன்.

தொலைபேசி எண் : 011-2784208, 011-2784537
தொலைநகல் இலக்கம் : 011-2784422
மின்னஞ்சல் முகவரி : gceolexamsl@gmail.com

ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே
பரீட்சை ஆணையாளர் நாயகம்